Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Special Issue - 3, October 2023** **E-ISSN: 2583-0481**

# The Occupation of Ploughing in *Perumpanatruppadai*

**Dr. R. Varalakshmi,** Assistant Professor, Dept. of Tamil, Thiruvalluvar College, Papanasam.
**ORCiD: https://orcid.org/0000-0001-7035-278X**
**DOI: 10.5281/zenodo.8397740**

## Abstract

*Ancient Tamil society had a life in harmony with nature. The specialty of preserving and nurturing the natural resources that form the basis of their lives belongs to the Tamil community. It is known that there was a pattern of worshipping nature among the Tamils, starting with the worship of minor deities. Ancient Tamil admired nature and used the ploughing industry according to nature. Tamil life is the central theme of Sangam literature. Farming supported Tamil life in ancient days. Thus, this article examines how the Tamils admire the ploughing and carry out the work as expressed in "Perumpanatruppadai", which is considered one of the top ten in Sangam literature.*

**Keywords:** Sangam Literature, *Perumpanatruppadai*, Ploughing, Ancient Tamil Society.

## References

[1] Aranga, Pari & Elaiyapillai, P. (Ed), *Palanthamilar Valviyal*. Annamalai University, Annamalai Nagar, 2016.
[2] Avudaiappan, Sundara, Sanga Selvi. *Semmozhi Pettagam*, NCBH, Chennai, 2010.
[3] Ramanathan, P. *Thonmai Semmozhi Tamil*, Tamilman Pathipagam, Chennai, 2007.
[4] Subramanian, S. V. *Pathupattu Moolamum Uraiyum*. Koviloor Athinam Veliyeedu, Koviloor, 2006.
[5] Mohan, R. & Nagarasan, V. (Ed.) *Pathupattu*. New Century Book House, Chennai. 2004.
[6] Sanjivi, N. *Pathupattu Arachiyurai*. Madras University, Chennai, 1973.
[7] Subramanaian, S. V. *Tamil Ilakkiya Varalaaru*. Meyyappan Pathipagam, Chidambaram, 2005.
[8] Somasundaranar, P.V. *Pathupattu Molamum Uraiyum* (vol-2), Kazhaga Veliedu, Chennai, 2007.
[9] Kavitha , S. "*Sanga Illakiyathil ulavusar puzhaku porutkal.*" IJCRT, Volume 11, 3 March 2023.
[10] Chandrasekar, "*Kalam Thorum Ulavu." Pathivugal*, 7, October 2019.
[11] Marimuthu, R. *"Pathupattil Nilam Sartha Seithigal."* Shanlax International Journal of Arts and Science, Vol. 4, pp. 63-66, April 2019.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

# பெரும்பாணாற்றுப்படை சுட்டும் உழவுத்தொழில்

**முனைவர் இரா. வரலெக்ஷ்மி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்.
ORCiD: https://orcid.org/0000-0001-7035-278X
DOI: 10.5281/zenodo.8397740

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைய தமிழ்ச் சமூகம் இயற்கையோடு இயைந்த வாழ்;க்கையை உடையது. தங்கள் வாழ்வுக்கு அடிப்படையாக அமைகின்ற இயற்கைப் பொருட்களைப் போற்றிப் பாதுகாத்து வளர்த்த சிறப்பு தமிழரி;ன் சமூகத்திற்கே உரியதாகும். சிறுதெய்வ வழிபாட்டில் தொடங்கி இயற்கையை வழிபடும் உளப்பாங்கு தமிழரிடையே நிலவி இருந்ததை அறியமுடிகின்றது. அந்தவகையான இயற்கையைப் போற்றும் பண்டைய தமிழர் இயற்கைக்கு அடுத்தப்படியாக உழவுத்தொழிலையே போற்றுகின்றான். சங்க இலக்கியத்தில் மையமாக விளங்குவது மானிட வாழ்வு. அந்த மானிட வாழ்விற்கு உறுதுணையாக விளங்குவது உழவுத்தொழிலே ஆகும். இவ்வாறு உழவுத் தொழிலைப் போற்றும் தமிழர்கள் சங்கஇலக்கியத்தில் பத்துப்பாட்டில் ஒன்றான பெரும்பாணாற்றுப் படையில் எவ்வாறு உழவுத்தொழிலை மேற்கொண்டனர் என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** சங்க இலக்கியம், *பெரும்பாணாற்றுப்படை*, உழவுத்தொழில், பண்டையத் தமிழ்ச் சமூகம்.

**முன்னுரை**

இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்த நம் பண்டைத் தமிழ்ச் சான்றோரின் இலக்கியங்கள் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் ஆகும். இவ்விலக்கியங்கள் அம்மக்களின் பண்பாடு, நாகரீகம், பழக்கவழக்கம், தொழில்கள் போன்றவற்றைப் பிரதிபலிக்கின்றன. உழவுத் தொழில், நெசவுத்தொழில், வேட்டையாடுதல் போன்ற பல தொழில்களைப் பழந்தமிழில் மக்கள் சிறப்புடன் செய்து மேன்மை அடைந்துள்ளனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளுக்குரிய தொழில்கள் பெருபாணற்றுப்படையில் இடம்பெற்றுள்ளன. மருத நில மக்களின் தொழிலான உழவுத்தொழிலை உழவர்கள் செய்து செல்வச்சிறப்புடன் வாழ்ந்த அவர்களின் வாழ்வைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

**உழுதல்**

உழவர்கள் வாழும் குடியிருப்புகளில் உணவுப்பொருள்கள் நிறைந்து காணப்படும். அவர்களின் வீட்டின் வாயிலில் உழவுத் தொழில் நன்கு நடை பயின்ற பெரிய எருதுகளை ஏரில் (கலப்பை) பூட்டி உழுவதற்குச் செல்வர். பெண் யானையின் வாய் போன்று வளைந்த வாயை

உடைய கலப்பையின் உடும்பு முகம் போன்ற கொழு, நிலத்தில் முழுவதும் மறையும்படி அமுக்கி, வளைய உழுதனர். இதனை,

**குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்**

**நடைநவில் பெரும்பகடு புதல்வில் பூட்டி**

**பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்**

**உடுப்பு முகமுழுக் கொழுமூழ்க ஊன்றி**

**தொடுப்பு எறிந்து உழுத (பெரும்பாணாற்றுப்படை, பா. 197- 201)**

என்ற வரிகளில் காணமுடிகிறது. இதில் 'செஞ்சால் உழவர் என்பது பலமுறை உழுதலைச் செய்யும் உழவரைக் குறிக்கிறது. அகலமாக உழுவதை விட ஆழமாக உழுவதை சிறந்தது என்ற பழமொழிக்கேற்ப உழவர் பலமுறை நிலத்தை உழுவர். ஒருமுறை உழுதலை 'ஒரு சால் உழவு என்றும், இருமுறை உழுதலை இருசால் உழவு என்றும் பலமுறை உழுதலை செஞ்சால் உழவு என்றும் குறிப்பிடுவர். உழுத நிலத்தில் உழவர்கள் விதையை விதைப்பர். உழத்தியர் களைகளைக் களைந்து பயிர விளைவிப்பர். பயிர் அறுக்கும் பருவம் வந்ததும் மகிழ்ச்சியில் திளைத்திருப்பர். அவர்கள் எழுப்பும் ஆராவாரத்திற்கு அஞ்சி, அங்கு மரங்களில் வாழும் குறும்பூழ் பறவைகள் பறக்கமுடியாத தம் இளங்குஞ்சுகளைக் கூட்டிக் கொண்டு போய் காட்டில் உள்ள மரங்களில் தங்கும். இதனை,

**வண்ணக் கடம்பின் நறுமலர் அன்ன**

**வளர்இளம் பிள்ளை தழீஇ, குறுங்கால்**

**கறைஅணற் குறும்பூழ் கட்சிச் சேக்கும் (பெரும்பாணாற்றுப்படை, பா. 202-204)**

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகின்றது.

**நாற்று நடும் பருவம்**

கரிய எருமைக் கடாக்கள் போல் பசிய கோரைகள் வயலில் வளரந்ததால், அதை உழுது சேறாக்கி நிலத்திலுள்ள நண்டின் வலைகள் எல்லாம் சிதையும்படி, உழவர்கள் தம் கால்களால் வயலை மிதித்து சமப்படுத்தினர். உழத்தியர் சமப்படுத்திய வயலில் நாற்றை நட்டனர். இதனை,

**அலவன் அளற்றுஅளை சிதைய**

**பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பின்**

**கார்ஏறு பொருத கண்அகன் செறுவின்**

**உழாஅ நுண்தொளி நிரவிய வினைஞர்**

**முடிநாறு அழுத்திய நெதீர்ச் செறுவில் (பெரும்பாணாற்றுப்படை, பா. 208 – 212)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

**களை எடுத்தல்**

நாற்றுநட்ட வயலின்கண் வளர்ந்த களைகளைக் களைபறிப்போர் களைவர். இதனை 'களைஞர் தந்த கணைக்கால் நெய்தன்" என்ற அடி சுட்டுகிறது. களைத்துப் போட்ட நெய்தல் மலரையே உழவர்களுடைய குழந்தைகள் சூடிமகிழ்வர். அதில் வெறுப்பு தோன்றும்போது

முள்ளிச் செடியின் மலரை பறிப்பர். பசிய கோரையிலிருந்து நாரைக் கிழித்து, நாரினால் மலரை மலையாகத் தொடுத்து ஈறும் பேனும் நிறைந்த தலையில் சூடிக்கொள்வர். சம்பங் கோரையினது காயை முறித்து உள்ளே இருக்கும் மகரந்தப்பொடியைத் தம் உடம்பிலேப் பூசிக் கொண்டு, பொன் தேய்க்கும் கல் போலத் தோன்றுவர். பழஞ்சோற்றை வெறுத்ததால் வைக்கோலால் வேய்ந்த வீட்டின் முற்றத்தில் கிடக்கும் உரலில் அவல் இடிப்பர். அவ்வோசை கேட்டு அவ்விடத்திற்கும் அருகில் இருக்கும் கிளிகள் அஞ்சும் என்று உழவர்களின் பிள்ளைகள் விளையாடுகின்ற செயல்களைப் பெரும்பாணாற்றுப்படையில் அறியமுடிகின்து. இதனை,

**களைஞர் தந்த கணைக்கால் நெய்தற்**
**கள்கமழ் புதுப்பூ முனையின் முட்சினை**
**முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்**
**கொடுங்கால் மாமலர் கொய்துகொண்டு... (பெரும்பாணாற்றுப்படை, பா. 213-216)**

என்ற பாடலடிகளின்வழி அறியமுடிகின்து.

**கதிர் அறுத்தல்**

கடுமையானத் தன்மையை உண்டாக்கும் குளவியைப் போல பசுமையில்லாமல் முற்றிய பெரிய செந்நெல்வினை உடைய நெல்தாளை உழவர்கள் அறுத்தனர். இதனை,

**கடுப்புடையப் பறவைச் சாதி அன்ன**
**பைதுஅற விளைந்த பெருஞ்செந் நெல்லின்**
**தூம்புடைத் திரள்தாள் துமித்த வினைஞர் (பெரும்பாணாற்றுப்படை., பா. 226-231)**

என்ற அடிகளில் அறியமுடிகிறது. மேலும், அறுத்த நெல் கதிர்களைப் பாம்புகள் உறைகின்ற மருத மரங்களில் நிழல்களிலுள்ள களங்கள் நிறையும்படி குவித்து வைத்தனர். இதனை,

**பாம்புஉரை மருதின் ஓங்குசினை நீழல்**
**பலிபெறு வியன்களம் மலிய ஏற்றி (பெரும்பாணாற்றுப்படை., பா. 232-233)**

என்ற அடிகளில் சுட்டுகின்றன. நெற்போர் குவித்துள்ள களத்தின் கண் சென்று உழவர்களைப் புகழ்ந்து பாடும் இரவலர்க்கு நெல்லை வழங்குதல், உழவர்களின் வழக்கமாகும். மேலும், கைகளைக் கோத்துக் கொண்டு துணங்கை கூத்து ஆடும் பூதங்கள் வெண்துகில் உடுத்தியது போன்று, குவித்து வைக்கப்பட்டுள்ள நெற்கதிர்களின் மேல் சிலந்தி வலைகள் கிடக்கின்றன என்று உவமைப் படுத்தகிக் கூறியுள்ளார். இதனை,

**கணம்கொள் சுற்றமொடு கைபுணர்ந்து ஆடும்**
**துணங்கை அம்பூதம் துகில் உடுத்தவைபோல்**
**சிலம்பி வால்நூல் வால்நூல் மருங்கின் (பெரும்பாணாற்றுப்படை, பா. 234-236)**

என்ற அடிகளில் காணமுடிகிறது.

**போர் அடித்தல்**

குவித்து வைக்கப்பட்டுள்ள நெற்போர்களின் பெரிய அடியை வாங்கி விரித்து கடா அடித்துப் பின்னர் நெல்லின்கண் உள்ள துகள் நிங்குவதற்கு வைக்கோலையும், கூளத்தையும்

நீக்கி, அவை உலர்ந்த பின்னர் கோடைக் காற்றிலே தூற்றிக் குவித்த நெற்குவியல்கள், வடதிசைக்கண் உள்ள பொன் போன்மேரு மலை போன்று தோன்றுகின்றன. இதனை,

**குழுமுநிலைப் போரின் முழுமுதல் தொலைச்சி**
**பகடுஊர்பு இழிந்த பின்றை, துகள்தப**
**வையும் துரும்பும் நீக்கி, பைதுஅற,**
**குடகாற்று எறிந்த குப்பை, வடபால்**
**செம்பொன் மலையின், சிறப்பத் தோன்றும் (பெரும்பாணாற்றுப்படை, பா. 237- 241)**

என்ற வரிகளின் வழி அறியமுடிகிறது. இவ்வாறு மருதநிலங்களில் உழவர்கள் உழுவதும் விதைத்தலும், நாற்றுமுடிகளை நடுவதும், களைபிடிங்கி எறிவதும், களைப்பூக்களை உழவர்களின் குழந்தைகள் குடுவதும், கதிர் அறுப்பதும், போர் அடிப்பதும், வைக்கோலையும் கூளத்தையும் நெல்மணியிலிருந்து பிரிப்பதும், கோடைக்காற்றிலே அதனை தூற்றுவதும், நெற்குவியல்களைக் குவிப்பதும் ஆரவாரமாக நிகழ்கின்றன என்பதை அறியமுடிகின்றது.

**நெற்கூடுகள்**

உழவர்களின் இல்லங்களின் எருதுடன், ஈன்ற வளைந்த காளையுடைய கன்றுகள் பக்கத்திலுள்ள தொழுவத்தில் பெரிய கயிற்றினால் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும். அவ்விலங்குகளில் ஏணிக்கு எட்டாத உயரமும், தலையைத் திறந்து உள்ளே சொரியப்பட்ட பழைய பல்வகை நெல்லை உடையதும் அழியாத் தன்மை கொண்டதுமாகிய உயர்ந்து நிற்கும் முதிர்ந்த நெற்கூடுகள் காணப்படுகின்றன. இதனை,

**ஏணி எய்த நீர்நெடு மார்பின்**
**முகடு துடித்தடுக்கிய பழம்பல் உணவின்**
**குமரி மூத்த கூடோங்கு நல்லில் (பெரும்பாணாற்றுப்படை, பா. 245 – 247)**

என்ற வரிகள் அழகுற விளங்குகின்றன.

**உழவர்களின் விருந்தோம்பல்**

நாளும் பல தேர்களைக் காணும் தச்சர் சிறாரும் விரும்புகின்ற பேரழகுடையதாகச் செய்யப்பட்டத் தேரினை உருட்டித் திரிகின்றனர். உழவர்களின் பிள்ளைகள் அங்ஙனம் திரிவதால் ஏற்பட்ட வருத்தம் நீங்கும் படியாகச் செவிலித் தாயாரைத் தழுவிப் பாலை உண்டு தமது படுக்கையில் நன்கு துயில் கொள்கின்றனர். இப்படி வளம் நிறைந்த மருதநிலத்தில் வாழும் உழவர்கள் தங்கள் இல்லத்திற்கு வரும் விருந்தினருக்கு தம் உழைப்பால் பெற்ற வெண்மை நிற நெற்சோற்றை அவர்களின் இல்லத்தில் வாழும் கோழிப் பெடையினால் சமைந்த பொரியலோடு சேர்த்து விருந்தளிப்பர். இதனை,

**தச்சர் சிறாஅர் நச்சப் புனைந்த**
**ஊரா நல்தேர் உருட்டிய புதல்வர்வருத்தம்**
**தளர்நடை வருத்தம் வீட அலர்முலைச்**
**செவிலிஅம் பெண்டீர்த் தழீஇ, பால்ஆர்ந்து**

**அமளித் துஞ்சும் அழகுடை நல்இல்**
**தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை**
**மல்லல் பேர் ஊர் மடியின், மடியா**
**வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி**
**மனைவாழ் அளகின் வாடொடும் பெறுகுவீர் (பெரும்பாணாற்றுப்படை, பா. 248 – 256)**

என்ற பாடலடிகளின்வழி உழவர்களின் விருந்தோம்பல் பண்பினை எடுத்துக் காட்டுகின்து.

**கரும்பாலை**

உழவர்களின் குடியிருப்புக்கு அருகில் கரும்பு ஆலைகள் காணப்படுகின்றன. அங்கே உழவர்கள் வயலில் பயிர் செய்த முற்றிய கரும்பினை ஓடித்து ஆலையில் இட்டு சாறு பிழிவர். பின் அச்சாற்றினைக் காய்ச்சுவர். அங்குள்ள எண்ணிறந்த ஆலைகளும் ஒருங்கே ஆடுதலால் புகை சூழ்ந்த ஆலைகள் எழுப்பும் சத்தத்தினை,

**மழைவிளை யாடும் கழைவளர் அடுக்கத்து**
**அணங்குடை யாளி தாக்கலின் பல உடன்**
**கணம்சால் வேழம் கதழ்வுற் றாஅங்கு**
**எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை**
**விசயம் அடூஉம் புகைசூழ் ஆலைதொறும் (பெரும்பாணாற்றுப்படை, பா. 257 – 261)**

என்ற அடிகளால் அறிய முடிகிறது. இதில் மழை மேகங்கள் விளையாடும் மூங்கில் மரங்கள் செறிந்துள்ள மலையில், கொடிய விலங்கால் தாக்குண்ட கதறுவது போல கரும்பாலையில் கருப்பஞ்சாற்றை காய்சும் போது எழும் சத்தம் இருக்கிறது என்று அறியமுடிகின்றது. மேலும், கரும்பாலைக்குச் செல்லும் புதியவர்களுக்கு உழவர்கள் கரும்பின் சாறு, கற்கண்டு போன்றவற்றை விரும்பிய அளவிற்குத் தந்து உபசரிப்பர். இதனை, **கரும்பின் தீம்சாறு விரும்பினிர் மிசைமின் (பெரும்பாணாற்றுப்படை, பா. 262)** என்ற அடியின் மூலம் அறிய முடிகிறது.

**முடிவுரை**

இவ்வாறாக, உழவர்கள் பயிரிடுவதற்கு நிலத்தை உழுது சமன்செய்தல், விதை விதைத்தல், நாற்றுநடுதல், களை எடுத்தல், கதிர் அறுத்தல், போர் அடுக்குதல், போர் அடித்தல், வைக்கோல் கூளத்தைப் பிரித்தல், பதர் தூற்றுதல், நெல்லைக்குவித்தல், நெற்கூடுகளில் சேகரித்தல் போன்ற நெல் பயிரிடும் முறையும், விருந்தினர்களை தம் இல்லங்களுக்கு வரவேற்று அவர்களுக்கு விருந்தோம்பும் பண்பினையும் மருதநில மக்கள் சிறப்பாக செய்து செழிப்புடன் வாழ்ந்ததை அறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] பாரி, அரங்க. இளையாபிள்ளை, பெ. (ப.ஆ), *பழந்தமிழர் வாழ்வியல்*. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 2016.

[2] ஆவுடையப்பன், சுந்தர. சங்கச் செல்வி, *செம்மொழிப் பெட்டகம்,* நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2010.

[3] இராமநாதன். *தொன்மைச் செம்மொழித் தமிழ்.* தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2007.

[4] *சங்க இலக்கியம்.* பத்துப்பாட்டு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[5] சஞ்சீவி, ந. *பத்துப்பாட்டு ஆராய்ச்சியுரை.* சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1973.

[6] சுப்பிரமணியன், ச.வே. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* கோவிலூர் மடலாயம் வெளியீடு, 2006.

[7] சுப்பிரமணியன், ச.வே. *தமிழ் இலக்கிய வரலாறு.* மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2006.

[8] சோமசுந்தரனார், பொ.வே *பத்துப்பாட்டு மூலமும் உரையும் (தொகுதி -2).* கழக வெளியீடு, சென்னை, 2007.

[9] கவிதா, செ. “*சங்க இலக்கியத்தில் உழவு சார் புழங்குபொருட்கள்.*” மார்ச் 2023, தொ. -1

[10] சந்திரசேகர். “*காலந்தோறும் உழவு.*” *பதிவுகள்,* 7, 2019.

[11] மாரிமுத்து, இரா. “*பத்துப்பாட்டில் நிலம் சார்ந்த செய்திகள்.*” *சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்,* மலர் -3, இதழ் -4, ப. 63-66, ஏப்ரல் 2019.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.